1994 மார்ச் 22]

73—

ஜவ்வாது மலைப்பகுதியில் சந்தன மரங்களை கையகப்படுத்தும்போது ஊக்கத்தொகை வழங்குதல்

21288—டாக்டர் பெ. வீரபாண்டியன்:

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜவ்வாது மலைப் பகுதியில் மக்களின் விளை நிலங்களிலுள்ள சந்தன மரங்களை வனத்துறை கையகப்படுத்தும்போது நிலத்தின் உரிமைதாரருக்கு அத்துறை மூலம் ஊக்கத்தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு ஆணை எண் 1462, வருவாய்த்துறை, நாள் 10.6.1907 ன்படி ஜவ்வாது மலையில் உள்ள அனைத்து சந்தன மரங்களும் அரசுக்குச் சொந்தமானதாகும். எனவே ஊக்கத் தொகை வழங்கும் வினா எழவில்லை.

முற்பகல் 10.50

டாக்டர் பெ. வீரபாண்டியன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஜவ்வாது மலையில் மலைவாழ் மக்களுடைய பட்டா நிலங்களில் பயிராகும் சந்தன மரங்கள் களவு போய்விட்டாலோ மற்ற பாதிப்பு ஏற்பட்டாலோ அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் பொறுப்பு ஏற்கும் நிலை உள்ளதா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை பொறுத்தவரையில் எப்போதுமே வனத்துறை விசாரித்தே நடவடிக்கை எடுத்து வருகிறது.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவ்வாது மலையில் செங்கம் தொகுதிக்கு உட்பட்ட கிட்டத்தட்ட 6 பஞ்சாயத்துக்களில் பட்டா நிலங்களில் அதிக அளவு சந்தன மரங்கள் விளைகின்றன. சந்தன மரங்கள் நிலத்தடி நீரை அதிக அளவில் உறிஞ்சுவதால் விளைச்சலுக்கு பாதிப்பு ஏற்படுகிற நிலை உள்ளது. எனவே இதற்குண்டான ஒரு ஊக்கத் தொகையை-காம்பென்சேஷன் அமௌண்ட் - அரசு கொடுக்க முன்வருமா என்று கேட்க விழைகின்றேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டம், திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்தில் உள்ள ஜவ்வாது மலையில் உள்ள அனைத்து சந்தன மரங்களும் அரசுக்குச் சொந்தமானவை. சந்தன மரங்கள் நிலத்தடி

நீரை உறிஞ்சுகிறது, எடுத்துவிடுகிறது என்பது ஒரு தவறான கருத்து. நீண்ட காலமாக அப்படி ஒரு கருத்து பொது மக்கள் மத்தியிலே பரவி வருகிறது. அதுகுறித்து வனத்துறை ஆராய்ச்சி செய்து பார்த்த பின்னால் அப்படிப்பட்ட எண்ணம் தவறானது என்று நாட்டு மக்களுக்கு எடுத்து வைக்கப்பட்டு, இதை நாட்டு மக்கள் புரிந்துக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு . உறுப்பினருக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நல்லாட்சியில் சந்தனக் கட்டைகள் திருட்டுகள் ஒழிக்கப்பட்டு வருகின்றன. சந்தனக் கட்டைகள் ஏற்றுமதி செய்யப்படுகிறதா? ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை செய்துள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை பொறுத்தவரையில் சந்தன மரம் அதிகமாக இருப்பது மட்டுமல்ல, உலகத்திலேயே சந்தன மரம் இன்றைக்கு தமிழகத்தில் மட்டும்தான் இருக்கிறது. இன்றைக்கு தமிழகத்தில் 1,227 டன் சுத்தம் செய்யப்பட்ட சந்தன மரங்கள் இருப்பதுடன், சுத்தம் செய்யப்படாத சந்தன மரங்கள் 3,300 டன் இன்றைக்கு அரசினுடைய கிடங்குகளில் இருக்கின்றன. மத்திய அரசு 1.4.1992-ல் சந்தனமரங்களை ஏற்றுமதி செய்வதைத் தடை செய்திருக்கிறார்கள். எனவே, தமிழகத்தில் இருக்கிற சந்தன மரங்களை ஏற்றுமதி செய்வதற்கு இயலாமல் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1.4.1992ல் மத்திய அரசு சந்தன கட்டைகளை ஏற்றுமதி செய்ய அனுமதி தரவில்லை என்று அமைச்சர் அவர்கள் .தெரிவித்து இருக்கிறார்கள். கிடங்குகளில் இருக்கக்கூடிய சந்தன மரங்களை எல்லாம் வைத்து நம்முடைய வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டத்தில் தெற்குப்பட்டியிலே, சந்தன ஆலையில் அந்த மரங்களை போட்டு சந்தன எண்ணெயாவது தயாரிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். காரணம் அந்த ஆலை மூடப்பட்டிருக்கிறது. பல ஆண்டுகளாக மூடப்பட்டிருக்கிறது. அதைத் திறப்பதற்கும் வழி செய்து, அந்தச் சந்தன மரங்களை வைத்து அரசு எண்ணெய் தயாரிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கொஞ்சம் வித்தியாசமான கேள்வியாக இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினருக்கு நான் பதில் சொல்ல ஆசைப்படுகிறேன்.

1994 மார்ச் 22]

ஏற்கனவே இங்கு இருக்கின்ற சந்தன மரங்களைக் கொண்டு-அங்கே தேவைக்கு அதிகமாகவே சந்தன மரங்கள் இருக்கின்றன. அந்த ஆலையில் அதை உற்பத்தி செய்து பார்த்தோம். அது லாபத்தில் ஓடாது மிகுந்த நஷ்டம் ஏற்பட்ட காரணத்தால் அது நிறுத்தி வைக்கப்பட்டது. மீண்டும் அந்தச் சந்தன ஆலையை தொடர்ந்து நடத்துவதற்காக அரசினுடைய பல்வேறு துறைகளோடு, காதி வில்லேஜ் இண்டஸ்டிரீஸ் போன்ற துறைகளோடு நாம் மேற்கொண்டு பார்த்தோம். அவர்கள் அது லாபம் ஈட்டுகிற ஒன்றாக கருதப்படாத காரணத்தால் அந்த ஆலையை எடுத்து நடத்தவில்லை. இருந்தாலும் அரசு அதைத் தொடர்ந்து நடத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என்பதையும், அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருந்து பணியாற்றுகின்ற நம்முடைய மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் அந்த ஆலையைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்பதற்காகக் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 74, திரு.கி.தருமலிங்கம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

74—

பொய்கை அரசு ஆண்கள் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்

***19776*—திரு. கி. தருமலிங்கம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அணைக்கட்டு தொகுதி, பொய்கை அரசு ஆண்கள் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக உயர்த்த எப்போது அனுமதி அளிக்கப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நிதி நிலைமை அடிப்படையிலும் முன்னுரிமை அடிப்படையிலும் இதற்கென அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு இந்தக் கோரிக்கை குறித்து பரிசீலித்து முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கி. தருமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக்க கோரியதனுடைய முக்கிய காரணம் இந்தப் பகுதியில் தாழ்த்தப்பட்டவர்களும் குறிப்பாக மிகப் பிற்படுத்தப்பட்ட சமூகத்து மக்களும் இருக்கிறார்கள். அந்த மாணவர்கள் பயிலுவதற்காக இதை மேல்நிலைப் பள்ளியாக்க நான் இக்கேள்வியைக்